## சாதாரண கூட்ட நிகழ்ச்சி நிரல்

**கூடலூர் நகராட்சியில் நவம்பர் மாதம் (30.11.2020) ஆம் நாள் திங்கள்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலக நகர் மன்ற கூட்ட அரங்கில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் நிறைவேற்றப்பட்ட மன்ற தீர்மானங்கள்.**

**பொருள்.1**

நகராட்சி ஆணையாளர் அவர்களின் 10/2020 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.1010, பதிவு செய்யப்பட்டது**

**பொருள்.2**

நகராட்சி பொறியாளர் அவர்களின் 10/2020 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.1011, பதிவு செய்யப்பட்டது**

**பொருள்.3**

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை கிளை) வழக்கு எண்.WP(MD)No-19918/2015 வழக்கு சம்மந்தமாக அரசு வழக்கறிஞர் திரு.எம்.கருப்பசாமி பாண்டியன் அவர்கள் ஆக்கிரமிப்பு தொடர்பாக திரு.சீ.நல்லு,த/பெ.சீனியப்பதேவர் மற்றும் திரு.ந.பாலகிருஷ்ணன், த/பெ நல்லு ஆகியோர் மீது இந்நகராட்சியின் மூலம் தொடர்ந்த வழக்கிற்கு நகராட்சி சார்பாக ஆஜராகி மேற்படி வழக்கினை நடத்துவதற்கான வழக்குக்கட்டணம் ரூ.9500/– மட்டும் வழங்கக்கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்படி, கடிதத்தின்படி அன்னாருக்கு வழக்கறிஞர் கட்டணம் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளாம்.

**தீர்மான எண்.1012,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.4**

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை கிளை) வழக்கு எண்.WP(MD)No-16206/2015 வழக்கு சம்மந்தமாக அரசு வழக்கறிஞர் திரு.எம்.கருப்பசாமி பாண்டியன் அவர்கள் ஆக்கிரமிப்பு தொடர்பாக திரு.சீ.நல்லு,த/பெ.சீனியப்பதேவர் என்பவர் நகராட்சி மீது தொடர்ந்த வழக்கிற்கு நகராட்சி சார்பாக ஆஜராகி மேற்படி வழக்கினை நடத்துவதற்கான வழக்குக்கட்டணம் ரூ.9500/– மட்டும் வழங்கக்கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்படி, கடிதத்தின்படி அன்னாருக்கு வழக்கறிஞர் கட்டணம் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளாம்.

**தீர்மான எண்.1013,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.5**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக பயன்படுத்தப்பட்டு வரும் கனரக வாகனம் ஈச்சர் டிப்பர் லாரிவாகன எண்.TN 60 Y 8120க்கு 2020 – 2021 ஆண்டிற்கு இன்ஸ்சூரன்ஸ் கட்டணம் செலுத்த உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.35000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1014,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.6**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்த வெளி கழிப்பிடமற்ற (Open Defecation Free) நகரமாக அறிவிக்கப்பட்டு தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதனை தொடர்ந்து அடுத்த கட்ட நிலையாக (ODF+) சான்று பெறுவதற்கு நகராட்சி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக நகராட்சி பகுதியில் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத நிலை மற்றும் குப்பையில்லாத நகராட்சியாக தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது என்ற சுய உறுதிமொழி சான்றிதழுக்கு(Self Declaration) நகர்மன்றத்தின் அனுமதிக்கும் பொதுமக்கள் இந்நகராட்சிக்கு (ODF+)மற்றும் கூடலூர் நகராட்சியினை குப்பையில்லாத நகராட்சியாக (Garbage Free City) மூன்று நட்சத்திர அங்கீகாரம் (Three Star Rating) சான்று பெறுவது தொடர்பான தங்களது ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகளை தெரிவிக்க அரசு நாளிதழில் விளம்பரம் செய்து உரிய செலவினத்தினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு. (ந.க எண்:1937/2020/எச்1)

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினம் பொது சுகாதாரஅவசரஅவசியம் கருதியும் , பொதுமக்ககளின் நலன் கருதியும் நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1015,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.7**

இந்நகராட்சி வார்டு எண்.4 சுந்தரராஜபுரம், பெண்கள் சமுதாய கழிப்பறை கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக பொது மக்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றனர். இந்நிலையில் நச்சுதூ தொட்டி (SepticTank) நிறைந்து விட்டதால் பயன்படுத்த முடியாத நிலையில் திறந்த வெளியில்மலம் கழிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. மேலும் மேற்கண்ட சமுதாய கழிப்பறையை இலவசமாக பயன்படுத்தி வந்ததால் நிறைந்த (SepticTank)ஐ வாகனம் வைத்து வெலவுகளை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. எனவே அவசர அவசியம் கருதி மேற்கண்ட (SepticTank)ஐ வாகனத்தின் மூலம் கழிவுகளை அப்புறப்படுத்த செலவாகும் உத்தேச செலவீனம் தொகை ரூ25,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.1940/2020/எச்1)**

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினம் பொது சுகாதாரஅவசரஅவசியம் கருதியும் , பொதுமக்ககளின் நலன் கருதியும் நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1016,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.8**

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.**989** நாள் **30.09.2020** ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **27.11.2020** ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு த்தொகை ரூ.இலட்ச த்தில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |
| 1 | கூடலூர் நகராட்சி வார்டு எண்-03 எல்லைத்தெரு குறுக்குத்தெரு மற்றும் | 1.10 | திரு.அ.தெய்வேந்திரன் | 0.07% | - |

| | | | | |
|---|---|---|---|---|
| வார்டு எண்-13, எம்.ஜி.ஆர் காலனி குறுக்கு தெரு ஆகியவற்றில் ஏற்கனவே பகிர்மான குழாய்கள் புதிதாக அமைத்தல் | | திரு.பி.முருகன் | – | 0.27% |

**அலுவலகக் குறிப்பு :–** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 0.07% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள **திரு.அ.தெய்வேந்திரன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண்.1017,அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள்.9**

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.**999** நாள். **29.10.2020** ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **27.11.2020** ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத்தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |
| 1 | கூடலூர் நகராட்சி வார்டு எண்-16ல் மேல்நிலைத்தொட்டிக்கு பின் புறமுள்ள மேற்கு பகுதியிலிருந்து கிழக்காக தண்ணீர் தொட்டி வளாகத்தின் முன்புறம் உள்ள நுழைவு வாயில் வரை,தண்ணீர் தொட்டி சாலை சந்திப்பு வரை மழைநீர் வடிகால்,சிறுபாலம் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 8.00 | திரு.பி.முருகன் | 0.01% | – |
| | | | திரு.அ.தெய்வேந்திரன் | – | 0.03% |

**அலுவலகக் குறிப்பு :–** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 0.01% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள **திரு.பி.முருகன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண்.1018, அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள்.10**

இந்நகராட்சியின் மூலம் தேர்தல் ஆணையம் மற்றும் மாவட்ட ஆட்சியர் உத்திரவின் பேரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்தம் 21.11.2020 மற்றும் 22.11.2020 ஆகிய தேதிகளில் நடைபெற்று முகாமில் 1010 படிவங்கள் பொது மக்களிடமிருந்து பெறப்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆய்வு கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது, மாவட்ட ஆட்சியர் ஆய்வில் வரப்பெற்ற விண்ணப்பங்களை உடனடியாக மாவட்ட ஆட்சியரக தேர்தல் பிரிவில் உள்ள தற்காலிக பணியாளர்கள் மூலம் Scan செய்து படிவங்களை பதிவேற்றம் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது.அதனை தொடர்ந்து பணியில் முக்கியத்தை கருதி Scan மற்றும் பதிவேற்றம் செய்வதற்கு ரூ.2/- வீதம் 1010 விண்ணப்பங்களுக்கு ரூ.2020/-க்கு செலவீனத்திற்கு அனுமதியும், மேற்கொண்ட பணியினை முடித்த தேர்தல் பிரிவு எழுத்தர் க.நரசிம்மன் என்பவருக்கு மேற்கண்ட தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளாம்.

**தீர்மான எண்.1019,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.11**

கூடலூர் நகராட்சியில் வார்டு எண்-17, எஸ்.டி.பி.தியேட்டர் எதிர்புறமுள்ள தெரு மற்றும் ராஜீவ் நகர் மெயின் ரோடு சந்திப்பில் உள்ள தெருவில் சேதமடைந்த இரண்டு சிறுபாலங்களை புதிதாக அமைப்பதற்கு ரூ.95,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.1020,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.12**

கூடலூர் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள மூன்று நீர் தேக்கத்தொட்டிகளில் இருந்து குடிநீர் விநியோகம் செய்வதற்கு நகராட்சி பகுதியில் உள்ள வால்வுகளை ஆப்ரேட் செய்வதற்கும் மேலும் மேல்நிலை நீர் தேக்கத்தொட்டியில் இரவு மற்றும் பகல் நேரங்களில் காவல் பணி பார்பதற்கும் 2019–20 ஆம் ஆண்டு தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தரவிலை அட்டவனையில் நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தில் ஏழு நபர்களை ஒப்பந்ததாரர் மூலம் (01/2021 முதல் 03/2021 ) ஆகிய மூன்று மாத காலத்திற்கு மட்டும் பணிகள் மேற்கொள்ள உண்டாகும் உத்தேச செலவினத்தொகை ரூ.1,80,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.1021,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.13**

கூடலூர் நகராட்சியில் உள்ள வார்டு எண்-1,அரசமரம் மேல்நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் வார்டு எண்-16,மேல்நிலை தொட்டிகளில் இருந்து குடிநீர் விநியோகம் செய்வதற்கு நகராட்சி பகுதியில் உள்ள வால்வுகளை ஆப்ரேட் செய்வதற்கும் மேலும் மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் இரவு மற்றும் பகல் நேரங்களில் காவல் பணி பார்ப்பதற்கும் ரூ.5,40,000/-க்கு நகர் மன்ற தீர்மான எண்.668 நாள்.30.08.2019ன் படி அனுமதி பெற்று 26.09.2020 ஆம் நாள் ஒப்பந்தப்புள்ளி பெற்று குறைந்த ஒப்பந்தபுள்ளி இந்நகராட்சி நகர் மன்ற தீர்மான எண்.704, நாள்.30.09.2019ன்படி அங்கீகரிக்கப்பட்டு 30.09.2019 ஆம் நாள் ஒப்பந்ததாரர் திரு.டி.சித்திரேசன் அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டு மேற்படி ஒப்பந்ததாரரிடமிருந்து 4 நபர்களை பெற்று குடிநீர் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் கொரானா வைரஸ் தடை உத்திரவின் காரணமாக மீண்டும் ஒப்பந்தப்புள்ளிகள் பெற இயலாத இருந்து வருவதால் 10/2020 அக்டோபர் முதல் டிசம்பர் 2020 வரை மூன்று மாத காலங்களுக்கு மேற்படி ஒப்பந்தத்திற்கு திரு.டி.சித்திரேசன் அவர்களிடம் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தில் 4 ஆட்கள் பெற்று குடிநீர் பணிகள் மேற்கொள்ள உண்டாகும் உத்தேச செலவினம் தொகை ரூ.1,50,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.1022,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.14**

கூடலூர் நகராட்சியில் உள்ள வார்டு எண்-13, மற்றும் வார்டு எண்-8, பூங்கா ஆகிய இரண்டு இடங்களில் உள்ள மேல்நிலை தொட்டி மற்றும் வார்டு எண்-21 கார்நிலைய தெருவில் உள்ள தரைத்தொட்டி ஆகிய இடங்களில் இரவு மற்றும் பகல் நேரங்களில் பணிபுரிய ஒப்பந்ததாரர் மூலம் 4 நபர்களை பெற்று குடிநீர் பணிகளை மேற்கொள்ள ரூ.5,40,000/-க்கு நகர் மன்ற தீர்மான எண்.667 நாள்.30.08.2019ன் படி அனுமதி பெற்று 26.09.2020 ஆம் நாள் ஒப்பந்தப்புள்ளி பெற்று குறைந்த ஒப்பந்தபுள்ளி இந்நகராட்சி நகர் மன்ற தீர்மான எண்.708, நாள்.30.09.2019ன்படி அங்கீகரிக்கப்பட்டு 30.09.2019 ஆம் நாள் ஒப்பந்ததாரர் திரு.அ.தெய்வேந்திரன் அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டு மேற்படி ஒப்பந்ததாரரிடமிருந்து 4 நபர்களை பெற்று குடிநீர் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும்

கொரானா வைரஸ் தடை உத்திரவின் காரணமாக மீண்டும் ஒப்பந்தப்புள்ளிகள் பெற இயலாத இருந்து வருவதால் 10/2020 அக்டோபர் 2020 முதல் 12/2020 டிசம்பர் 2020 வரை மூன்று மாத காலங்களுக்கு மேற்படி ஒப்பந்தத்திற்கு திரு.அ.தெய்வேந்திரன் அவர்களிடம் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தில் 4 ஆட்கள் பெற்று குடிநீர் பணிகள் மேற்கொள்ள உண்டாகும் உத்தேச செலவினம் தொகை ரூ.1,50,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.1023,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.15**

கூடலூர் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டில் உள்ள **MP 2501 L** ஒளி நகல் இயந்திரத்திற்கு தேவையான டோனர் **(ZEROX MACHINE TONNER)** 4 எண்ணம் வாங்குவதற்கு உண்டாகும் உத்தேச செலவினத்தொகை ரூ.15,000/-க்கும் மற்றும் RICHO கம்பெனியினரின் அங்கீகரிக்கப்பட்ட **STAR OFFICE SOLUTION** நிறுவனத்தாரிடம் வாங்குவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.. **(ந.க.எண். /2020/இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1024,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.16**

கூடலூர் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டில் உள்ள **MP 2501 L** ஒளி நகல் இயந்திரத்தினை **(ZEROX MACHINE)** பழுதுநீக்கம் மற்றும் வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்வதற்கு உண்டாகும் உத்தேச செலவினத்தொகை ரூ.15,000/-க்கும், பணியினை RICHO கம்பெனியினரின் அங்கீகரிக்கப்பட்ட **STAR OFFICE SOLUTION** நிறுவனத்தார் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.. **(ந.க.எண். /2020/இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1025,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.17**

இந்நகராட்சி நகரமைப்பு பிரிவில் கட்டிட வரைபட பொறியாளராக (Grade-II) பதிவு செய்ய வேண்டி திரு.ரெ.விஜயகுமார் த/பெ ரெங்கசாமி ,கூடலூர் என்பவர் விண்ணப்பித்துள்ளார். மேற்படி வரப்பெற்ற விண்ணப்பத்தின்படி அசல் சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டதன் அடிப்படையில் அன்னாரை இந்நகராட்சியில் நகரமைப்பு பிரிவில் பதிவு பெற்ற கட்டிட வரைபட பொறியாளராக பதிவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண். 1959/2020/எப்1)**

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

நகரமைப்பு பிரிவில் கட்டிட வரைபட பொறியாளராக, நகரமைப்பு சட்ட விதிகளுக்கு உட்பட்டு நிபந்தனையுடன் பதிவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1026,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.18**

கூடலூர் நகராட்சி எல்லைக்குட்ப்பட்ட வார்டு எண்.1 மந்தையம்மன் கோவில் தெருவில் உள்ள கதவு எண்–11 , வரிவிதிப்பு எண். 1187, திரு.தெய்வேந்திரன் பெயரிலிருந்து திரு.மொக்கை என்ற பின்னத்தேவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ததை ஆட்சேபித்து திரு.தெய்வேந்திரன் என்பவரால் சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்.WP (MD) No-3777/2020–ஐ ஏற்று நடத்திட அரசு வழக்கறிஞர் திரு.எம்.கருப்பச்சாமி அவர்களிடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.9,500/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு ,

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1027,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.19**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வீடு வீடாக சென்று திடக்கழிவுகளை பிரித்து எடுத்து வர உள்ள BOV வாகனங்கள் மிகவும் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் திடக்கழிவு மேலாண்மை பணிகள் தொய்வடையும் நிலையில் உள்ளது. எனவே 20 BOV வாகனங்களை பராமரிப்பு செய்து வர (AMC) வருடாந்திர பராமரிப்பு செலவுக்காக உண்டாகும் உத்தேச செலவினம் தொகை ரூ.2,50,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு **(ந.க.எண்.1994/2020/எச்1)**

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1028,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.20**

கூடலூர் நகராட்சி வார்டு எண்-7, அரசு விதைப்பண்ணை சாலையில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான ஆடடி மணையில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் பொதுநிதியில் மேற்கொள்ள ரூ.4,50,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1029,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.21**

கூடலூர் நகராட்சியில் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்-10 பெத்துக்குளத்தில் அமைந்துள்ள நகராட்சி உரக்கிடங்கில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் இடத்தில் திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி உரக்கிடங்கில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித்திட்டம் 2018-19ன் கீழ் ரூ.215.00 இலட்சம் மதிப்பீட்டில் கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.மேற்படி சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரியத்தினரிடமிருந்து Consern to Establish பெறுவதற்கு செலுத்த வேண்டிய கட்டணத்தொகை ரூ.43,600/-ஐ தமிழ்நாடு மாசுக்காட்டுபாட்டு வாரியத்திற்கு செலுத்தவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.. **(ந.க.எண்.908/2018/இ1)**

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1030,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.22**

கூடலூர் நகராட்சி வார்டு எண்-17, இராஜீவ் காந்தி நகரில் உள்ள பெண்கள் கழிப்பறை அருகில் ஏற்கனவே உள்ள சிறு மின் விசை பம்பிற்கு புதியதாக ஆழ்துளை கிணறும் புதிய நீர் மூழ்கி மின் மோட்டரும் அமைப்பதற்கும் மற்றும் வார்டு எண்-18 பொம்மையசாமி கோவில் தெருவில் ஏற்கனவே உள்ள சிறுமின் விசை பம்பிற்கு புதியதாக நீர் மூழ்கி மின் மோட்டரும் அமைப்பதற்கும் ரூ.1.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.**(ந.க.எண். /2020/ இ1)**

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.1031,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.23**

தேனி மாவட்டம் இரண்டாம் நிலை நகராட்சியான கூடலூரில் 32 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 41924 மக்கள் தொகையுடன் 11685 குடியிருப்புகள் 21 வார்டுகளாகப் பிரிக்கப்பட்டு பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கண்ட பணியில் 39 DBC பணியாளர்கள் 6 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு குழு ஒன்றுக்கு 6 நபர்கள் வீதம் அதாவது ஒவ்வொரு நபரும் நாள் ஒன்றுக்கு 50 வீடுகளில் பணிகளை மேற்கொள்ள 1 குழுவில் உள்ள 6 DBC பணியாளர்கள் நாள் ஒன்றுக்கு 300 வீடுகளில் வீடு வீடாக சென்று தண்ணீர் தொட்டிகளையும், தரைத் தள தொட்டிகளை பார்வையிட்டு கொசு உற்பத்திக்கு எதுவாக

திறந்திருக்கும் தொட்டிகளில் தேவைப்பட்டால் அபேட் மருந்து ஊற்றி கொசுப்புழுக்களை அழித்தும் கொசுப்புழு வளர்ந்து காணப்பட்டால் தண்ணீரை அப்புறப்படுத்தியும் வீட்டின் சுற்றுப்புறத்தில் உள்ள தேவையற்ற பொருட்களான டீ, கப், தேங்காய் ஓடு, பழைய பிளாஸ்டிக் பைகள், டயர்களை அப்புறப்படுத்தியும் பொது மக்களுக்கு டெங்குநோய் பரவும் காரணங்களை எடுத்துக்கூறி விழிப்புணர்வும் கொடுக்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட DBC பணியாளர்களுக்கு தேனி மாவட்ட ஆட்சியரின் செயல்முறை உத்திரவின்படி 39 DBC பணியாளர்களுக்கு நாளொன்றுக்கு ரூ.208 மற்றும் தொழிலாளர் சேமநலநிதி ரூ 25 சேர்த்து ரூ 260 வீதம் ஜனவரி 2019 முதல் ஜுலை 2019 வரை ஊதியத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்கிட நகர்மன்றத் தீர்மான எண் 564 நாள் 08.03.2019 –இல் அனுமதி பெறப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. தற்சமயம் தினக்கூலி அடிப்படையில் மாவட்ட ஆட்சியரகத்தின் வழிகாட்டுதலின் படியும், சேமநலநிதி ரூ 25 சேர்த்து நாள் ஒன்றுக்கு ரூ 260 வீதம் ஆகஸ்ட் 2019 மற்றும் செப்டம்பர் 2019 வரை உரிய EPF செலுத்தி 39 DBC (Dengue breeding checkers) பணியாளர்களை பணியமர்த்தி பணிகளை மேற்கொள்ள நகர்மன்ற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் தற்போது மேற்காணும் டெங்கு களப்பணியாளர்களை ஜனவரி 2020 முதல் மார்ச் 2020 வரையிலான 3 மாதங்களுக்கு தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சியரின் (2019–20) செயல்முறை உத்திரவின்படி அனுமதிக்கப்பட்ட தினக்கூலி அடிப்படையில் 39 நபர்களை பணியமர்த்தி நகர்மன்றத் தீர்மான எண்:889 நாள் 31.03.20 மற்றும் நகர்மன்றத் தீர்மான எண்:797 நாள் 31.12.19 இன் படி நகர்மன்ற தீர்மானத்தில் அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது ஜனவரி 2021 முதல் மார்ச் 2021 வரையிலான காலத்திற்கு 39 டெங்கு களப்பணியாளர்களை பணியமர்த்தி ஏற்படும் செலவினம் கீழ்க்கண்டவாறு உள்ளது.

**கீழ்க்கண்டவாறு (2020–2021)**

| | | | |
|---|---|---|---|
| 1) | நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ 217 வீதம் (ஜனவரி 2021 முதல் மார்ச் 2021(முடிய) (91* 217 * 39 ) | = | ரூ 770133 |
| 2) | தொழிலாளர் சேம நல நிதி (13.15 %) | = | ரூ 101272 |
| 3) | தொழிலாளர் ESI (4.75%) | = | ரூ 36581 |
| 4) | தொழிலாளர் LIC (50* 39* 3) | = | ரூ 5850 |
| 5) | நிர்வாக செலவு 5% | = | ரூ 38507 |
| | **மொத்தம்** | | ரூ .9,52,343 |

கொசு ஒழிப்பு பணிக்காக 39 DBC பணியாளர்கள் பணியமர்த்த 3 மாதங்களுக்கு (ஜனவரி 2021 முதல் மார்ச் 2021 முடிய ) உண்டாகும் உத்தேச செலவீனம் ரூ 10,00,000/– க்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி பெற்று தனியார் மூலம் ஆட்கள் பெற்று டெங்கு களப்பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் மற்றும் கொரோனா தடுப்பு பணிகளின் அவசர அவசியம் கருதியும் ஏற்கனவே DBC பணிக்கு ஆட்கள் வழங்கி வரும் **(CLEAN CARE SERVICE CENTRE)** நிறுவனத்தாரிடமிருந்து ஏற்கனவே ஒப்பந்த புள்ளியில் கொடுத்துள்ள ரூ.281/– விலை விகிதத்தில் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1032,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.24**

கூடலூர் நகராட்சி வார்டு எண்-4,கோட்டை கருப்பசாமி கோயில் தெருவில் மானூத்து பங்காளிகள் சங்கம் முன்புறம் அமைக்கப்பட்டுள்ள PVC பகிர்மான குழாயினை G.I பைப்பினால் புதிதாக பகிர்மான குழாய் அமைக்க ரூ.1,00,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு **.(ந.க.எண். 2046/2020/ இ1)**

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் குடிநீர் திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.1033,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.25**

இந்நகராட்சி அலுவலகப் பயன்பாட்டிற்கு கணக்குப் பிரிவு, சி1 பிரிவு மற்றும் எச்1 பிரிவுகளில் அலுவலக கோப்புகள், கணக்குப் பதிவேடுகள், பணிப்பதிவேடுகள் ஆகியன பராமரிப்பின்றி இருப்பதால் அதனை பாதுகாக்கும் பொருட்டு இரண்டு ஸ்டீல் (7அடி) பீரோக்கள் அரசு டான்சி நிர்வனத்தில் வாங்குவதற்கு ஆகும் செலவினம் ரூ.21,452/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:**

அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர் நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று அரசு நிறுவனமான டான்சிக்கு தொகை செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1034,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.26**

இந்நகராட்சிக்கு ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித்திட்டம் **2020-21**ன் கீழ் (IUDM) நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்(MA2) (G.O) D.NO:303 நாள்.09.09.2020ன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதனடிப்படையில் விரிவான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்து தொழில் நுட்ப அனுமதி பெறுவதற்கு மழைநீர் வடிகால் அமைத்திட திட்ட வடிவமைப்பு (Structural Desighn) பெறுவதற்கு உண்டான செலவினம் ரூ.30,000/- இந்நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளர் திரு.பா.முருகன் அவர்களால் மேற்கொள்ளபட்டது. மேற்படி தொகை ரூ.30,000/-ஐ திரு.பா.முருகன் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.. **(ந.க.எண்.930/2020/இ1)**

அலுவலக குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்.1035,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.27**

கூடலூர் நகராட்சி பகுதியில் வடகிழக்கு பருவமழை பெய்து வருவதால் தினசரி நகர்பகுதியில் விநியோகம் செய்யப்படும் குடிநீரில் குளோரின் அளவினை தினசரி சாரிபார்க்கும்படி மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி குடிநீர் குளோரின் அளவினை சரிபார்க்க பரிசோதனைக்கருவிகள் (Testing Apparatus) 4 எண்ணம் புதியதாக வாங்கியதற்கு உண்டான செலவினம் ரூ.4136/-ஐ செலவினம் மேற்கொண்ட இந்நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளர் திரு.பா.முருகன் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.. **(ந.க.எண். /2020/இ1)**

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.1036,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.28**

இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட கீழ்கண்ட மூன்றாண்டு குத்தகை இனங்களுக்கு 31.03.2021 உடன் குத்தகை உரிமக்காலம் முடிவடைவதால் 2021–2022 முதல் 2023–2024 (31.03.2024) வரையிலான காலங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோர வேண்டியுள்ளதால், இதற்கான திருத்திய பொது நிபந்தனைகள், ஏலப்பொறுப்புத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகைக்கும் உபவிதிகள் திருத்தம் செய்து பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு,

| வ. எண். | குத்தகை இனம் | ஏலப்பொறுப்பு தொகை ரூபாயில் | கூடுதல் வைப்புத் தொகை ரூபாயில் |
|---|---|---|---|
| 1 | தினசரி சந்தை கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 2,00,000 | 3,00,000 |
| 2 | ஆடு அடிக்கும் தொட்டியில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 2,00,000 | 1,00,000 |
| 3 | காந்திஜி பூங்காவில் உள்ள கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 1,00,000 | 1,00,000 |
| 4 | மயாணத்தில் உள்ள இலவம் மற்றும் புளிய மரங்களின் மேற்பலன் அனுபவிக்கும் உரிமம். | 30,000 | 10,000 |
| 5 | வைரவன் வாய்க்காலில் உள்ள தென்னை மற்றும் இலவமரங்களின் மேற்பலன் அனுபவிக்கும் உரிமம். | 25,000 | 10,000 |

| | | | |
|---|---|---|---|
| 6 | பேருந்து நிலையத்தில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 2,00,000 | 4,00,000 |
| 7 | ராஜா கிணறு தென்னை மரங்கள், சந்தை தண்ணீர்தொட்டியில் உள்ள புளியமரங்களின் மேற்பலன் அனுபவிக்கும் உரிமம். | 1,00,000 | 20,000 |
| 8 | ஓட்டான்குளம் கரையில் உள்ள இலவமரங்களின் மேற்பலன் அனுபவிக்கும் உரிமம். | 35,000 | 10,000 |

**அலுவலகக் குறிப்பு :**

1) மேற்படி குத்தகை இனங்களுக்குகான விதிகள் திருத்தம் செய்து பொது ஏலம் /ஒப்பந்தப்புள்ளிகள் கோர மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி ஏல அறிவிப்பினை அச்சிடவும், செய்தி மக்கள் தொடர்பு துறை வாயிலாக விளம்பரம் வெளியிடவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ. 25000/–க்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1037,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.29**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உலகலாவிய தொற்று நோயான கொரோனா வைரஸ் மற்றும் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வரும் நிலையில் தற்சமயம் மழைக்காலம் என்பதாலும் கீழ்கண்ட பொருட்கள் இருப்பில் மிகக் குறைவாக உள்ளதால் அவசர அவசியம் கருதி உடனடியாக

| வ.எண் | பொருள் | அளவு | உத்தேசசெலவினம்தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | நிலவேம்பு | 100 கிலோ | 1,50,000/– |
| 2 | நீர்த்த சுண்ணாம்புத்தூள் | 4000 கிலோ | 50,000/– |
| 3 | பிளிச்சிங் பவுடர் | 2500 கிலோ | 1,50,000/– |
| 4 | Gas Cylinder (Fogging) | 300 எண்ணங்கள் | 76,000/– |
| 5 | கொசுப்புகை அடிக்கும் இயந்திரம் பழுதுநீக்கம் செய்தல். | 11 எண்ணங்கள் | 75,000/– |

கீழ்கண்டவாறு வாங்க உண்டாகும் உத்தேச செலவினம் தொகை ரூ.5,25,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு **(ந.க.எண்.2004/2020/எச்1)**

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1038,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.30**

சென்னை நகராட்சிகளின் நிர்வாக இயக்குனரக அலுவலக ந.க.எண்.19775/J2/2019–3, நாள்15.12.2020 இன்படி, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள Hair Cutting Saloon (முடிதிருத்த நிலையம்) Beauty Parlour (முடிதிருத்த நிலையம்) SPA Marrage Parlar (ஸ்பா) Trade Licence பெற வேண்டுமென தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 2018 மற்றும் சென்னை உயர் நீதி மன்ற உத்திரவு எண். 31941/2018, நாள்.04.04.2019 இன் படியும் செய்தித்தாளில் அறிவிப்பு செய்து அதன் நகலை சென்னை நகராட்சிகளின் நிர்வாக ஆணையரக அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க ஆகும் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.1446/2020/எச்1)**

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1039,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.31**

கூடலூர் நகராட்சி வார்டு எண்-12, KVR தெருவில் உள்ள கண்ணன் கோவிலின் முன்புறம் மற்றும் பக்கவாட்டில் மழை நீர் வடிகால் அமைத்து பேவர் பிளாக் சாலை அமைக்க ரூ.1,60,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1040,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.32**

கூடலூர் நகராட்சியில் மொத்தம் 172 ஆழ்துழை கிணறுடன் கூடிய சிறுமின்விசை பம்புகள் உள்ளன.மார்ச் 2020 முதல் கொரனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளுக்குரிய 144 தடை உத்திரவு அமலில் இருந்தது.கொரனா வைரஸ் தாக்கத்தின் காரணமாக பொதுமக்கள் அனைவரும் வீட்டில் இருக்கும் நிலை ஏற்பட்டதால் சிறுமின்விசை பம்புகளின் பயன்பாடு அதிகமாக இருந்தது.அதன் காரணத்தினால் அடிக்கடி சிறுமின்விசை பம்புகளில் அடிக்கடி பழுது ஏற்பட்டது. பழுதுகளை அடிக்கடி சரிசெய்யும் நிலை ஏற்பட்டதால் மார்ச் 2021 வரை பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உண்டாகும் கூடுதல் செலவினம் ரூ.4,00,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு.</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினங்களை குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.1041,அனுமதிக்கப்பட்டது.**